**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 52 of 2022

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.அன்பழகன்

Date : 18.02.2026

**குறுக்கு விசாரணை**

வாதி குஞ்சப்பன் என்னுடைய அப்பா. என் அப்பா எனக்கு எழுதி கொடுத்துள்ள பொது அதிகார பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். அந்த பொது அதிகாரத்தை என் அப்பா 2025ல் எழுதி கொடுத்தார். அந்த பொது அதிகார பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கும் பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட பதிவு ஆவணம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான்.

2) நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் எம்.ஏ.,பி.எட் படித்துள்ளேன். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். என் அப்பா விவசாயமும், மாட்டு வியாபாரமும், சிமெண்ட் கம்பி கடையும் வைத்திருந்தார். தாவா கிரைய ஒப்பந்தம் எழுதும் போது எனக்கு வயது 35. என் அப்பா தாவா கிரைய ஒப்பந்தம் எழுதும் போது ரூபாய் 10 லட்சம் கொடுத்த போது தெரியாது என்றால் சரியல்ல. எனக்கு தெரியும், ஊரில் வைத்து ஊர்காரர்கள் முன்னிலையில் பேசப்பட்டது. அப்போது நான் அங்கிருந்தேன். நான் அந்த இடத்தில் இல்லை என்பதால் தான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா பிரதிவாதிகளுக்கு ரூபாய் 10லட்சம்

கொடுக்கவில்லை என்றாலும், அதை பிரதிவாதிகள் பெற்று கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

3) தாவா சொத்து மதிப்புள்ள சொத்துள்ள என்றால் சரியல்ல, அது விவசாய நிலம், கரடு. என் அப்பாவும், 1ம் பிரதிவாதியும் நண்பர்கள் கிடையாது, ஒரே ஊர்க்காரர்கள். என் அப்பா பிரதிவாதிகளை அணுகி அவர்களை கூட்டுதாரர்களாக சேர்த்து கொண்டு சில்லறை பெட்ரோல் நிலையம் அமைத்து கொள்வதாகவும் அதற்கு தாவா சொத்து தன் பேரில் இருக்க வேண்டும் என்பதற்காக பிரதிவாதிகளிடம் வெற்று பத்திரங்களில் கையெழுத்து பெற்று தாவா கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பெட்ரோல் பங்க அமைக்க முடியாததால் பிரதிவாதிகள் தாங்கள் கையெழுத்து போட்ட வெற்று தாளை கேட்ட போது என் அப்பா எப்போது வேண்டுமானாலும் பெட்ரோல் பங்க் அமைப்பதற்கு தனக்கு உரிமம் வந்துவிடும் என்று சொல்லி பிரதிவாதிகள் கையெழுத்து போட்ட வெற்று பேப்பர்களை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா விவசாயம் செய்வதற்காக தான் நிலத்தை வாங்கினார்.

4) என் அப்பா அசல் வழக்கு எண் 183/2022 என்ற வழக்கை பிரதிவாதிகள் மீது ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். என் அப்பா விவசாயம் செய்யும் போது பிரதிவாதிகள் தொல்லை செய்ததால் அவர்கள் மீது என் அப்பா பென்னாகரம் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு ஒருதலைபட்ச உத்திரவு வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தை 30 ஆண்டுகளாக குத்தகைதாரர் என்ற முறையில் பயன்படுத்தி வருகிறோம். அந்த குத்தகையை

பதிவு செய்துள்ளோம். அந்த நிலம் 62 சென்ட். முதலில் 5, 6 வருடங்கள் ரூபாய் 5 ஆயிரம் கொடுத்தோம். பிரதிவாதிகள் அதிகமாக கேட்டதால் ரூபாய் 10 ஆயிரம் கொடுத்தோம். பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மூன்று நீதிமன்றங்களில் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சிறுபான்மை இனத்தை சேர்ந்த முஸ்லீம்கள் என்பதால் அவர்களின் சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல, அவர்கள் அதே ஊரில் தான் இருக்கிறார்கள். பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், சொத்தை விற்பதாக அவர்கள் எப்போதும் ஒப்புகொள்ளவில்லை என்றாலும், இந்த வழக்கே தவறாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா நில புரோக்கர் வேலை செய்யவில்லை.

5) தாவா கிரைய ஒப்பந்தத்தின் பேரில் என் அப்பா எந்த பணமும் கொடுக்கவில்லை என்பதால் தான் அந்த ஆவணம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத பொது அதிகார பத்திரம் படி எனக்கு சாட்சியம் சொல்ல அருகதை இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்று கொள்ளகூடியதல்ல என்றால் சரியல்ல.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.